காஞ்சிபுரம், கால்நடை பராமரிப்புத்துறை, மண்டல இணை இயக்குநர் அவர்களின் செயலாணை

பிறப்பிப்பவர் – மரு.ப.ஜெயந்தி, பிவிஎஸ்சி.,

ந.க.எண்.5690/ஆ/2021 நாள்.15.11.2021

பொருள் – பணியமைப்பு – தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு அமைச்சுப்பணி – கீழ்நிலைப் பதவியிலிருந்து இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கான பெயர்ப் பட்டியல் 2019–ம் ஆண்டுக்கானது (15.03.2019 அன்றுள்ளபடி) அங்கீகரித்து ஆணையிடப்பட்டது – நியமனம் பெற்ற இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை–
1. தலைமையலுவலக செயலாணை ந.க.எண்.32321/ஆர்2/2020, நாள்.11.12.2020.
2. தலைமையலுவலக கடித ந.க.எண்.32321/ஆர்2/2020, நாள்.06.10.2021.

---------

பார்வை 1ல் காணும் தலைமையலுவலக செயலாணையின்படி கீழ்நிலைப் பதவியிலிருந்து இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கான பெயர்ப்பட்டியல் 2019–ம் ஆண்டுக்கானது (15.03.2019 அன்றுள்ளபடி) அங்கீகரித்து ஆணையிடப்பட்டு அதன்படி செங்கல்பட்டு, கால்நடை பராமரிப்புத்துறை, உதவி இயக்குநர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்த திரு.ப.சரவணன் என்பவருக்கு பணிமாறுதல் முறையில் பதவி உயர்வில் பெரம்பலூர் மண்டலம், பெரம்பலூர், கால்நடை பராமரிப்புத்துறை, உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

பெரம்பலூர், கால்நடை பராமரிப்புத்துறை, உதவி இயக்குநர் அலுவலகத்தில் திரு.ப.சரவணன் இளநிலை உதவியாளராக 23.12.2020 முற்பகல் பணியில் சேர்ந்து கொண்டார். மேலும் தற்போது செங்கல்பட்டு கால்நடை பராமரிப்புத்துறை, உதவி இயக்குநர் அலுவலகத்தில் 22.07.2021 அன்று முதல் பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில், பார்வை 2ல் காணும் தலைமையலுவலக கடிதவழி தெரிவித்தவாறு மேற்படி இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 23.12.2020 அன்று முற்பகல் முதல் அவரது இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எண். | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் இடம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | திரு.ப.சரவணன்,<br>இளநிலை உதவியாளர்<br>உதவி இயக்குநர் அலுவலகம்,<br>கால்நடை பராமரிப்புத்துறை,<br>செங்கல்பட்டு | 23.12.2020 முற்பகல் | 23.12.2020 முற்பகல் |

மேற்படி இளநிலை உதவியாளருக்கு பணிவரன்முறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண்பருவம் காலத்தில் வைக்கப்படுகிறார் எனவும் இதன்வழி தெரிவிக்கப்படுகிறது.

மண்டல இணை இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத்துறை,
காஞ்சிபுரம்.

பெறுநர்
திரு.ப.சரவணன், இளநிலை உதவியாளர், உதவி இயக்குநர் அலுவலகம்,
கால்நடை பராமரிப்புத்துறை, செங்கல்பட்டு – உரிய வழியாக
நகல் – உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, செங்கல்பட்டு
நகல் பணிந்தனுப்பப்படுகிறது.
இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை–35.
நகல்– நிர்வாக அலுவலர்
நகல்–பணிப்பதிவேடு
நகல்– இருப்புக் கோப்பு

13.11